13 செப்டம்பர் 2020

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பொதுக்காலம் 24 ஆம் ஞாயிறு

SENT WITH JOY TO HEAL

மாதாந்திர கருப்பொருள்:

**உங்களுக்காகவும் பலருக்காகவும் இரத்தம் சிந்தப்பட்டது**



## வலிமையானவர்களால் மட்டுமே மன்னிப்பைத் தரமுடியும்

வலிமையானவர்களால் மட்டுமே மன்னிப்பைக் கேட்க முடியும். ஆனால் இன்னும் அதிகமான வலிமையானவர்களால் மட்டுமே மன்னிப்பை வழங்க முடியும் என்று ஒரு கூற்று உண்டு; மன்னிப்பு என்பது பல சமயங்களில் பலவீனம் என்று நினைக்கத் தூண்டும். “இது எனக்கு அல்ல”, “மற்றவர்கள் அனைவரும் தவறு, நாம் சரி”, அவர்கள் தான் முதலில் என்னைக் காயப்படுத்தினார்கள்”, அவர்கள் இதை எனக்குச் செய்திருக்கக் கூடாது. இதுபோன்ற பேச்சுகளை அடிக்கடி நாம் கேட்டிருக்கிறோம் இல்லையா?

இன்றைய நற்செய்தியில் பேதுரு மிகவும் ஆர்வத்தோடு இயேசுவிடம் ஏழு முறை மன்னித்தால் போதுமே என்று கேட்கிறார். ( யூத மத வழக்கப்படி மூன்று முறை மன்னிப்பது போதுமானது ) ஆனால், இயேசு அவர்களைக் கேட்கிறார் “எழு முறை போதாது, ஏழு முறை எழுபதுமுறை” என்று அவர்களை வியக்க வைக்கிறார்.

**சிலுவையைப் பார்க்கும்போதெல்லாம், என் முழு உள்ளத்தோடு நான் மன்னிக்கிறேன்**

— புனித ஃபாஸ்டினா

இதன் வழியாக இயேசு அவர்களுக்கு குறிப்பால் உணர்த்துவது; ஒருவரை மன்னிக்க வரைமுறை இல்லை. ஏனென்றால், ஒவ்வொரு நாளும் செய்த அதே தவற்றை மீண்டும் மீண்டும் செய்யும்போதும், கடவுள் நம் குற்றங்களை மன்னிக்கும்போது, நாம் ஏன் ஒருவர் மற்றவரை மன்னிக்கக்கூடாது?

இருந்தபோதும், இதை யாரால் செய்யமுடியும்? மீண்டும் மீண்டும் மன்னித்துகொண்டே இருக்க முடியுமா? உங்கள் திருமண வாழ்க்கையை தலைகீழாக மாற்றி, உள்ளுக்குள்ளே உங்களை கண்ணீர் சிந்தவைக்கும் மோதல்களை எவ்வாறு எதிர்கொள்கீன்றீர்கள்? நீண்ட காலமாக பேச்சு வார்த்தை இல்லாத குடும்ப உறுப்பினரோடு மீண்டும் உண்மையான உறவை ஏற்படுத்த முடியுமா? கற்பழிப்பு செய்த ஒருவரை மன்னிக்கமுடியுமா? ஒரு குழந்தைக்கு வன்முறை செய்தவரை மன்னிப்பீர்களா? இது போன்று காயங்களை அனுபவித்தவர்களுக்கு மன்னிப்பைப் பற்றி சிந்தித்துப் பார்க்கக்கூட இயலாது.

இருந்தபோதும், இயேசு நம்மை இன்னும் அதிகமாக செய்யவேண்டும் என்று கேட்கிறார். இன்னுமொரு சமயத்தில் இயேசு கூறுகிறார்: உன்னுடைய அங்கியைக் கேட்பவனுக்கு உன்னுடைய மேலாடையையும் கொடுத்துவிடு. ஒரு கன்னத்தில் அறைபவருக்கு மறு கன்னத்தையும் காட்டு. மன்னிப்பது என்பது நம்மால் முடிந்த செயல் தான் என்று இயேசு இதன்வழியாகக் கூறுகிறார். அவ்வாறு மன்னிப்பது நிச்சயம் நல்ல பலன்களைத் தரும். இதுபோன்ற செயல்களை இயேசு வார்த்தைகளால் மட்டுமே கூறாமல், தம்முடைய செயல்களாலும் காண்பித்தார். இதன் வழியாக, கடவுளின் அடையாளத்தை இயேசு வெளிப்படுத்துகிறார் கடவுள் இரக்கமும் பேரன்பும் கொண்டவர். சினம் கொள்ளத் தாமதிப்பவர்.

### இன்றைய வாசகங்கள்:

சீராக்கின் ஞான நூல்: 27: 33-28:7

திருபா: 103: 1-4, 9-12

உரோ: 14: 7-9

மத்:18: 21-35

பின்வரும் பழமொழி நமது மனிதப் போராட்டங்களைத் துல்லியமாகப் படம் பிடித்துக்காட்டுகிறது. நீங்கள் உங்களை எவ்வளவு அதிகமாக அறிந்திருக்கிறீர்களோ, அவ்வளவு அதிகமாக உங்களை மன்னித்து விடுங்கள். நம்மைப் பற்றி சுயமாக அறிந்துள்ள வளர்ச்சி, இதைவிட அதிகபலன்களைத் தருகிறது. இது பிறரை அதிகமாக மன்னிக்க நம்மை வழி நடத்துகிறது. மிகவும் முக்கியமான மாபெரும் கட்டளையான, கடவுளை அன்பு செய், உன்னை அன்பு செய்வது போல அயலானையும் அன்பு செய் என்ற கட்டளைக்குத் தேவையானது மன்னிப்பு என்ற அணிகலன்

உண்மையாகவே மன்னிப்பது என்பது ஒரு கைதியை விடுவிப்பதாகும் அவ்வாறு மன்னித்தபின் அந்தக் கைதி யாரென்று கண்டுபிடித்தால், அது நீங்கள் தான். ✝

**வாரம் ஒரு வசனம்**

கடவுளின் அடையாளத்தை இயேசு வெளிப்படுத்துகிறார்

INTERNAL CIRCULATION ONLY
BUL 37/2020

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

**மினவுதல் மாதா தேவாலயம்**
85 A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542
தொ.நகல்: 06-767 7544
Email: serembanvisitation@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. சேவியர் அண்ட்ரூ
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. கென்னத் கோபால்

*2020 ஆம் ஆண்டின் கருப்பொருள்*
***மகிழ்ச்சியுடன் குணமளிக்க அனுப்பப்பட்டோம்***
*2020 செப்டெம்பர் (புரட்டாசி) மாதத்தின் கருப்பொருள்:*
***உங்களுக்காகவும் பலருக்காகவும் இரத்தம் சிந்தப்பட்டது***

**பங்கு அலுவலக நேரம்**

திங்கள் - வெள்ளி: காலை 9.00 - மாலை 5.30

சனி, ஞாயிறு: காலை 9.00 - மதியம் 1.30

(மறு அறிவித்தல் வரை)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்: பொதுக்காலம் 24ஆம் ஞாயிறு 12 – 13 செப்டெம்பர் 2020**
சீரா 27: 30 - 28:7 தி.பா: 103: 1-2, 3-4, 9-10, 11-12 உரோ 14: 7-9 மத்தேயு 18: 21-35
**“ஆண்டவர் இரக்கமும் அருளும் கொண்டவர், பொறுமையும் பேரன்பும் உள்ளவர். ” (தி.பா 103)**

ஆலயத்தி நடைபெறும் திருப்பலிகளில் அனைவரும் கலந்துகொள்ளலாம். அனைத்து வெளி நாட்டினரும் இப்போது கலந்துகொள்ளலாம். ஒவ்வொரு மொழி திருப்பலியிலும், 480 பேர் மட்டுமே கலந்துகொள்ள முடியும். கலந்துகொள்ளவிரும்புவோர் ஆலயத்தின் அகப்பக்கத்தில் உள்ள தொடர்பை பயன்படுத்தி உங்கள் பெயர்களைப் பதிந்துகொள்ளவும். ***www.visitationseremban.org***
செப்டம்பர் மாதம் முதல்இணையத்தின் வழி திருப்பலிகள் ஒளிப்பரப்புவதுஇனி மேல்இருக்காது.

**திருப்பலிகளின் நேர அட்டவணை:**
ஞாயிறு: 20-09-2020 காலை 7.30 தமிழ் காலை 10.00 ஆங்கிலம்
பகல் 12.00 ( மாண்டரின்) - ஒருவாரம் மாண்டரின் அடுத்த வாரம் தேசிய மொழி என்று நடைபெறும்.
அவ்வப்போது மொழி வாரியாக நடைபெறும் திருப்பலிகள் வரும்வாரங்களில்மாற்றம் காணும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பங்கு காணிக்கை | **6/9/20 : RM5,577.55** | **ஆராதனை அறை விசேட காணிக்கை** | **6/9/20 : RM724.00** | **ப.ம.வ.மே.குழு விசேட காணிக்கை** | **6/9/20 : RM726.00** |

**கவனிக்கவும்:**

1) திருப்பலியில் பங்கெடுக்கும் அனைவரும் கண்டிப்பாக முகக்கவசம் அணிந்திருக்க வேண்டும். உங்களுக்கான முகக் கவசத்தை உடன் கொண்டுவரவும்.
2) ஆலயத்தில் 1.30 மணி நேரத்திற்கு முன்னதாக வரவும். இது பாதுகாப்பு நடைமுறைகளை மேற்கொள்ளஇது அவசியமாகிறது.

- பங்கின் அனைத்து மொழிப் பணிக்குழுக்களும் உங்களுடைய பணிக்குழுப் பொறுப்பாளர்கள் தேர்வை நடத்தி, புதிய தலைமைத்துவத்தை தேர்ந்தெடுக்குமாறு கேட்டுகொள்கிறோம். ஏற்கெனவே இருப்பவர்களை மீண்டும் தேர்ந்தெடுக்க வேண்டும். ஏற்கெனவே புதிய தலைமைத்துவத்தை தேர்ந்தெடுத்திருந்தால் உங்களுக்கு எங்களின் வாழ்த்துகள். இன்னும் தேர்ந்தெடுக்காதோர், செப்டம்பர் இறுதிக்கும் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- அன்பு பங்கு மக்களே, பமமேப உணவு வங்கி - ஞாயிறு காலை 8..00 எ பகல் 12.30 வரை திறந்திருக்கும். தேவைப்படும் பொருட்கள்: அரிசி(5 கிலோ) சமையல் எண்ணெய் ( 2 கிலோ) சார்டின், பிஸ்கெட்டுகள், பால் மாவு, மைலோ, சோக்லோட் பானம், கெட்டிப்பால், மீகூன்/உடனடி மீ. கூடுதல் விவரங்களுக்கு: ஜோன் ( 017-615 8961) அல்லது பெர்னதெத் ( 012- 2715 840) , பமமேப உணவு வங்கிக்கு நீங்கள அளித்து வரும் மகத்தான ஆதரவுக்கு மிக்க நன்றி. தொடர்ந்து உங்களுடைய ஆதரவை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- 2020 அக்டோபர் மாதத்தில் நடைபெறவிருக்கும் (அனைத்து மொழி) குழந்தைகளுக்கான திருமுழுக்கு அருளடையாளத்திற்கான விண்ணப்பங்களை செப்மடம்பர் மாத இறுதிக்குள் பங்கு அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- ஞாயிறு மறைக்கல்வி வகுப்புகள் (ஆங்கிலம்)வருகின்ற 19-09-2020 & 20-09-220 தொடங்க உள்ளன. ஆரம்ப பள்ளி வகுப்புகள் ( ஆண்டு 1-6 வரை) சனிக்கிழமைகளில் மாலை 4.30 - 6.00 வரை, இடை நிலை பள்ளி வகுப்புகள் ( படிவம் 1- 4 வரை ) ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 11.30 - 12.45 வரை

**மரித்த ஆன்மாக்களுக்காக மன்றாடுவோம்.**

பிரான்சிஸ் யோங் கோங் சோ இறப்பு: 10/9/20

**முடிவில்லாத ஒளி இவர்கள் மேல் ஒளிர்வதாக!**

ஆங்கில பாடல் குழுவில் ( ஞாயிறு திருப்பலி காலை 9.00மணி) இணைந்துப் பாட புதிய உறுப்பினர்களை வரவேற்கிறோம். ஆர்வமுள்ளோர் தொடர்பு கொள்ள:
திரு. டேனியல் ராம் -012-6588715

நடமாட்டக் கட்டுப்பாட்டு நேரத்தில் (2020 மார்ச் 18 - 13 செப்டெம்பர் வரை) பெறப்பட்ட காணிக்கைகள்:

| **பங்கு காணிக்கை** | பங்கு காணிக்கை | தியான இல்லம் | பமமேகு உணவு வங்கி |
|---|---|---|---|
| மொத்த தொகை: | **RM 56,813.00** | **RM 63,938.00** | **RM 12,525.00** |

***உங்களின் அனைத்து வகையான பங்களிப்புகளுக்கும் மிக்க நன்றி. இறைவன் உங்களை நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!***

**நன்கொடை / காணிக்கைகள் கீழ்க்கண்டவற்றில் எதற்கு நன் கொடை அல்லது காணிக்கை செலுத்துகின்றீர்கள் என்று குறிப்பிடவும்:**

(1) பங்கின் நிதி (2) திருப்பலி கருத்துகள்
(3) ஆராதனை அறை சீரமைப்பு (4) பமமேப உணவு வங்கி

**உங்களுடைய தொகையை இணையத்தின்வழி பங்கின் வங்கிக் கணக்கில் செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம். விவரங்கள் :**

1.வங்கியின் பெயர்: **Public Bank Berhad**
2.வங்கிக் கணக்கில் உள்ள பெயர்:: **Church of Visitation**
3.வங்கிக் கணக்கு எண்: **3121194612**

**பணம் செலுத்தியபின் எதற்கு நீங்கள் பணம் செலுத்தினீர்கள் என்பதை குறிப்பிட மறவாதீர்கள்:**

**(i) தொகை (ii) என்ன காராணம்:**
**(1) பங்கின் நிதி காணிக்கை**
(2) **திருப்பலி ஒப்புக்கொடுத்தல்:** இனிவரும் காலங்களில் இணையத்தின் வழி பணம் செலுத்த வேண்டாம். ஆலய அலுவலகத்தை நாடவும். அலுவலகம் திங்கள் முதல் சனி வரை திறந்திருக்கும்
**(3) ஆராதனை அறை சீரமைப்பு**
**(4) பங்கு மனித வள மேம்பாட்டின் உணவு வங்கி ( கூடுதல் தகவல்களுக்கு: ஜோன் டேவிட்சன் (017-615 8961) அல்லது பெர்னதெத் (012- 2715840)**

**பங்கு அலுவலக குறிப்புகளுக்காக, நீங்கள் பணம் செலுத்திய ரசீதை பங்கின் மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும்.**
serembanvisitation@gmail.com

**உங்களின் கவனத்திற்கு:**

மரித்தோருக்கான சடங்குகள் இல்லங்களில் நடத்தப்படாது. மினவுதல் தேவாலயத்தின் இறந்தோருக்கான சடங்கு அறையில் நடைபெறும். இது உடனடி நடப்புக்கு வருகிறது.

- **தியான அறை** - எவ்வாறு இந்த அறை தயாராகிறது என்பதை பங்கு முக நூல் மற்றும் இணையத்தின்வழி காணவும்.
- **பங்கின் அனைத்துப் பணிக்குழுக்களின்** தலைமைத்துவமும் மாற்றம் காணவுள்ளது

- அருட்பணி கென்னத் மற்றும் நானும் இணைந்து இதுவரை பல்வேறு பணிக்குழுக்களில் இணைந்து தங்களுடைய வற்றாத உழைப்பைத் தந்த அனைவருக்கும் எங்களுடைய மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். உங்களையும் உங்கள் குடும்பத்தையும் இறைவன் நிறைவாய் ஆசீர்வதித்து வழி நடத்துவாராக! அருட்பணி சேவி.

- அன்பு பங்கு மக்களே, பங்கு குருவானவரைச் சந்திக்க ஆலய அலுவலத்தைத் தொடர்புகொண்டு முன்பதிவு செய்து கொள்ளுங்கள். குருவானவரின் தனிப்பட்ட கைபேசிக்கு அழைப்பதை தயவு செய்து தவிர்க்குமாறு கேட்டுக்கொள்கிறோம். நன்றி.
- ஆலயத்தில் உள்ள வகுப்பறைகள் /மண்டபம் மற்றும் ஒன்றுகூடலுக்கான இடங்களை முன்பதிவு செய்ய தயவு செய்து பங்கு குருவானவரை அழைக்க வேண்டாம். அனைத்து முன்பதிவுகளுக்கும் பங்கு அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்

முதியோர்களுக்கான திருமுழுக்கு அருளடையாளங்களின் கொண்டாட்டங்கள்
13-09-2020 காலை 9.30 (ஆங்கிலம்)
20-09-2020 பகல் 12.30 ( மாண்டரின்)
27-09-2020 காலை 7.30 ( தமிழ்)

**இன்று ஆங்கிலத் திருப்பலியில் புதிதாக திருமுழுக்குப் பெறும் 8 பேருக்கும் நம்முடைய வாழ்த்துகள்.**
**அவர்களை வரவேற்று நம்முடைய ஆதரவைத் தருவோம்.**